Daily Thanthi
The Angel of God
Date: 28-01-2009 | Edition: Chennai | Page: 19 | Source: Bureau | Clip size (cm): W: 4 H: 14

Clip: 1 of 1

# கடவுளின் தேவதை

ஸ்டான்ட்ர்ட் சார்ட்டர்டு வங்கியின் மூத்த துணைத் தலைவரும், மனித வளத்துறை தலைவருமான ஜோதி மேனன் எழுதியுள்ள "கடவுளின் தேவதை" (தி ஏஞ்சல் ஆப் காட்) என்ற ஆங்கில புத்தகம், மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே 3 தத்துவ புத்தகங்களை எழுதிய ஜோதிமேனன், ஒரு கதை புத்தகத்தை முதன் முதலாக எழுதியுள்ளார்.




மும்பை தாராவியில் உள்ள குடிசைப்பகுதியில் வறுமையின் சூழலில் பிறந்த கதாபாத்திரம் மூசா. அவன் ஒரு கிரிமினல். எந்த தொழிலில் ஈடுபடும் மனிதனாக இருந்தாலும், அவனுக்கும் ஒரு மறுபக்கம் உண்டு என்ற வகையில் மூசாவின் மனிதநேய குணங்கள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. சிறந்த ஆங்கிலத்தில் விறுவிறுப்புடனும், வேகத்துடனும் இந்த கதை எழுதப்பட்டுள்ளது.

(வெளியிட்டோர்: சேடர் புக்ஸ், வினியோகம்: புஸ்தக் மகால், ஜே 3/16, தர்யாகஞ், புதுடெல்லி-2; விலை: ரூ.195)